[1981 மே 7

திரு. சோ.. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது நம் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய சிறு தொழில்கள் சரியாக நடக்க முடியாமல், தொடர்ந்து நடக்க முடியாமல் இருப்பதற்குக் காரணம், அவர்கள் வாங்கக் கூடிய ரா-மெடீரியல் சரியான விலையில் கிடைக்காத காரணத்தினாலும் அவர்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களுக்கு சரியான மார்க்கெட் கிடைக்காத காரணத்தினாலும்தான் சீராக நடக்கவில்லை என்பதை அரசு ஆராய்ந்து, இது ஒரு ஆலோசனை மையமாக இல்லாமல், அவர்களுடைய பொருட்களுக்கு நல்ல விலை கொடுத்து, வாங்குவதற்கு வேண்டிய ஏற்பாட்டை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மூலப் பொருள்கள் கொடுப்பதற்கு சிட்கோ நிறுவனம் இருக்கிறது. அதேபோல் சிட்கோ நிறுவனம் மூலமாக உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களை வாங்குவதற்கும் வசதிகளையெல்லாம் தமிழக அரசு செய்து வருகிறது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். இந்த தொழில்நுட்ப மையம், செண்டர் பார் அப்ரோப்ரியேட் டெக்னாலஜி வளர்ந்து வருகின்ற தொழில்களுக்கு தொழில்நுட்ப உதவியளிக்க, தொழில் அதிபர்களுக்கு கொடுக்கப்படுகின்ற முயற்சியாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (—) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

அ. வினாப் பட்டியலில் சேர்க்கப் பெற்ற வினாக்கள் தள்ளி வைக்கப்பெறுதல்,

திரு. என், எஸ், வி. சித்தன், பாயிண்ட் ஆப் ஆர்டர் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக கேள்வி நேரத்தில் ஏறத்தாழ 20 கேள்விகள் இடம் பெறும். ஆனால், கடந்த சில நாட்களாக மன்றத்திலே ஒன்றிரண்டு அமைச்சர்கள் இல்லாத காரணத்தினால், சம்பந்தப்பட்ட கேள்விகள் ஒத்திவைக்கப்பட்டன. இது ஏதோ ஒரு நாள் ஏற்பட்டதென்றால் பரவாயில்லை. நீங்கள் 2, 3 நாட்களுக்கு முன் கொடுத்து விடுகிறீர்கள். நாங்கள் எங்களுக்கு இருக்கின்ற வேலைகளை யெல்லாம் ஒத்தி வைத்துவிட்டு, இங்கே வந்து

கலந்து கொள்கிறோம். ஆகவே, இனிமேல் அமைச்சர் கேள்விகள் இடம்பெற்றால், கண்டிப்பாகக் கலந்துகொள்ள தாங்கள் ஏற்பாடு செய்தால், அப்படி ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தருமாறு.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதெல்லாம் சர்வ சாதாரணம். அவர்களுக்கு ஏதாவது திடீரென்று என்கேஜ்மென்ட், இன்கன்வீனியன்ஸ் ஏற்படலாம். ஆனால், அதைப் பற்றி பரிசீலித்து, அவ்வாறு இனிமேல் நடக்காமல் பார்த்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கேள்விப் பட்டியல் முன்னாலே வந்துவிடுகிறது. மாண்புமிகு அமைச்சர்கள் சட்ட சபைக்கு வரக்கூடாது என்பதல்ல. தவிர்க்க முடியாத சில பொது வேலைகள் வருகின்ற காரணத்தாலே இந்த நிலைமை ஏற்படுகின்றது. சான்றாக நேற்றைய தினம் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கேள்விகள் இடம் பெற்றிருந்தன. அவர் டெல்லி செல்ல வேண்டிய அவசரமான நிலை ஏற்பட்டது. அதைப்போலத்தான் ஒவ்வொரு அமைச்சர்களும் தங்களுக்குத் தெரிவிக்கிறார்கள். ஆனால் இந்தப் பேரவையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் கவனிக்க வேண்டியது, கேள்வி நேரம் என்பது ஒரு மணி நேரம் ; அந்த ஒரு மணி நேரமும் வினாக்கள்-விடைகள் நடைபெற்றனவா என்றுதான் பார்க்க வேண்டுமே தவிர, யார் வந்தார்கள், யார் போனார்கள் என்று 'அட்டென்டென்ஸ்' எடுப்பது சரியானதல்ல.

திரு. என். எஸ். வி. சித்தன் : துணைத் தலைவரவர்களே ....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சொல்லியாகி விட்டது உட்காருங்கள்.

ஆ. தஞ்சாவூர் பொருட்காட்சிக்கு கட்டாய வசூல்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, தஞ்சாவூரிலே நடைபெறுகிற பொருட்காட்சியிலே தொடர்ந்து அங்கே இருக்கிற சில அதிகாரிகள் 200, 500 என்று டிக்கட் அச்சடித்து கட்டாயப்படுத்தி வசூல் செய்வதாக பொது மக்களிடமிருந்து எதிர்ப்பு வந்திருக்கிறது. இது குறித்து மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் ஏதாவது விளக்கம் அளிக்க முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.